DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 543/2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-2 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ஈஸ்வரன் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. கனகராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1 to A3 absent. u/s 355 BNSS petition filed and allowed.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 12.02.2026

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கரூரில் வேலை பார்த்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் கடம்பனேந்தல் ஆகும். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும்.,( எதிரிகளை பார்த்தால் அடையாளம் காட்டமுடியும் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை) அ.சா.1 எனது மனைவி ஆவார். கடந்த 11.06.2018 தேதி மாலை 5.00 மணிக்கு எனக்கு ஆப்ரேசன் நடந்து நான் வீட்டில் இருந்தபோது எங்கள் வீட்டு வாசலில் அவர்கள் வீட்டு கட்டுமான பணிக்காக உள்ள மண்ணை கொட்டி வைத்திருந்தார்கள். அதற்கு நான்

எதற்காக வாசலில் கொட்டி வைத்துள்ளீர்கள் என்று கேட்டதற்கு தேவிடியாபயலே என்று அசிங்கமாக பேசினார்கள். அதை கேட்டவுடன் எனது மனைவி ஒடி வந்து கேட்டபோது எதிரி ரத்தினம் எனது மனைவியை கையால் ஓரே அடியாக அடித்துவிட்டார். எதிரி பாகம்பிரியாள் அவர்கள் வேலியில் உள்ள முள்கம்பியை எடுத்து வந்து அடித்து விட்டார். இதை பார்த்து கொண்டிருந்த எனது அப்பா ஓடி வந்து தடுக்க வந்தவரை எதிரி ராமசுந்தரி கம்பியால் எனது அப்பாவை தலையில் ஒங்கி அடித்ததில் அவருக்கு இரத்த காயம் ஏற்பட்டது.

2. அதன்பிறகு எனது உறவினர்கள் துணையுடன் தேவக்கோட்டையில் உள்ள தனியார் மருத்துவமனையில் எனது அப்பாவை சிகிச்சைக்கு சேர்த்தோம். எனது மனைவிக்கு பெரிய காயம் இல்லாததால் அவர் தன் சிகிச்சை எடுத்து கொண்டார். 4 நாட்கள் சென்று நடந்த சம்பவத்தை கூறி நடவடிக்கை எடுக்கும்படி தொண்டி காவல் நிலையம்சென்று எனது மனைவி புகார் அளித்தார். போலிசார் வீட்டில் வந்து என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் கடம்பேனேநதலில் தான் பிறந்து வளர்ந்தேன். கடம்பனேந்தல் கிராமத்தை பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். கடம்பனேநதல் கிராமத்தில் அமைந்துள்ள பாதையின் விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். நானும் எதிரிகளும் உறவினர்கள் என்றால் சரிதான்.பிரதான சாலையிலிருந்து எதிரிகள் வீட்டிற்கு எங்கள்வீட்டை தாண்டிதான் செல்ல வேண்டும். எதிரிகளின் வீட்டு வாசல் வடக்கு திசை பார்த்து அமைந்துள்தளது., எங்கள் வீட்டுவாசல் தெற்கு திசை பாாத்து அமைந்துள்ளது. எதிரிகளின் வீடுமுன்பு கிழமேல் 15 அடி அகலம் உள்ள பாதை செல்கிறது என்றால் சரிதான்.

2.எங்கள் வீட்டின் முன்பும் 15 அடி அகலம் உள்ள பாதை அமைந்துள்ளது என்றால் ஒரு சிறிய பாதை அமைந்துள்ளது. நாங்கள் இருசக்கர வாகனம் கம்பு முதலியவற்றை வைத்து எதிரிகளின் வீட்டிற்கு செல்லும் பாதையை அடைத்து வைத்தோம் என்றால் சரியல்ல மேற்படி நாங்கள் அடைத்து வைத்தது தொடர்பாக ஊரில் பஞ்சாயத்து பேசினார்கள் என்றும் அதற்கு நாங்கள் கட்டுபடவில்லை என்றால் சரியல்ல. சம்பவம்

நடப்பதற்கு சுமார் 1 மாதத்திற்கு முன்பு நான் எதிரிகளின் வீட்டிற்குசெல்லும் பாதையை அடைத்து அதற்கு அவர்கள் தொண்டி கா்வல் நிலையத்தில் புகாா கொடுத்து விசாரணையில் இனிமேல் நான் பாதையை அடைத்து இடையூறு செய்யமாட்டேன் என எழுதி கொடுத்து வந்தேன் என்றால் சரியல்ல. மேற்படி தொண்டி காவல்நிலையம் சென்ற விவரத்தை எனது மனைவியிடம் கேட்டு தெரிந்து கொண்டேன்.

2. எனக்கு இரண்டு பிள்ளைகள் ஒரு ஆண். ஒரு பெண். சம்பவமானது நடைபெற்றபோது எனது மகன் வீட்டில்தான் இருந்தார். எனதுமகனிடம் இருசக்கரவாகனம் உள்ளது. சம்பவத்தன்று எனது மகன் தனது இருசக்கரவாகனத்தை வைத்து எதிரிகளின் வீட்டிற்கு செல்லும் பாதையை அடைத்ததால் அது தொடர்பாக எதிகிள் கேட்டதற்கு நாங்கள் எதிரிகளை அடித்து காயம் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவ தேதயில் எதிரிகள் எங்கள் மீது புகார்கொடுத்து குற்ற எண். 79/2018 என பதிவுசெய்யப்பட்டு வழக்கானது நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

3.எனது மனைவியுடன் நான் புகார் அளிக்க செல்லவில்லை. எனது மனைவி எப்போது புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிகள் எங்களை தாக்க பயன்படுத்தியதாக சொல்லப்படும் முள்வேலி, கம்பிகளை கைப்பற்றி போலிசாரிடம் ஒப்படத்தோமா என்றால் இல்லை. மருத்துவமனைக்கு சென்று விட்டதால் கைப்பற்ற இயலவில்லை. எதிரிகள் உண்மையாக தாக்கியிருந்தால் கைப்பற்றி கொடுத்திருப்போம் என்றும் வழக்கு சம்பவம் உண்மையாக நடைபெறவில்லை என்றால சரியல்ல. நான் சொல்லியுள்ளவாறு எதிரிகள் எந்த வழக்கு சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றும் நங்கள் எதிரிகளை தாக்கிவிட்டு அவர்கள் எங்கள் மீது கொடுத்த புகாரிலிருந்து தப்பிபதற்காக எதிரிகள் மீது எனது மனைவி பொய்யாக புகார் கொடுத்துள்ளார் எனறும் அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.